# ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டங்கள்!

3 ஆம் பக்கம் தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| மதுரை வடக்கு | மேலூர் | மாண்புமிகு பி.மூர்த்தி<br>வெங்கடேசன் எம்.எல்.ஏ.,<br>சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| மதுரை மாநகர் | மதுரை தெற்கு | மாண்புமிகு முனைவர்<br>பழனிவேல் தியாகராஜன்<br>கோ.தளபதி, எம்.எல்.ஏ.,<br>அன்னவயல் கணேசன் |
| மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் | சேடப்பட்டி மு.மணிமாறன்<br>நெல்லிக்குப்பம் புகழேந்தி<br>கவிஞர் சிவமுத்துவளவன் |
| தேனி வடக்கு | பெரியகுளம் | தங்க தமிழ்செல்வன், எம்.பி.,<br>கே.எஸ்.சரவணகுமார், எம்.எல்.ஏ.,<br>ஆலங்குடி செல்வராஜ் |
| தேனி தெற்கு | ஆண்டிப்பட்டி | கம்பம் ராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,<br>மகாராஜன், எம்.எல்.ஏ,<br>தக்கோலம் தேவபாலன்<br>எழும்பூர் கோபி |
| விருதுநகர் வடக்கு | விருதுநகர் | பேராசிரியர் சுப.வீரபாண்டியன்<br>ஏஆர்ஆர். சீனிவாசன், எம்.எல்.ஏ.,<br>குடந்தை ரமேஷ் |
| விருதுநகர் தெற்கு | சாத்தூர் | மாண்புமிகு<br>கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்<br>சௌ.தங்கபாண்டியன், எம்.எல்.ஏ.,<br>நெல்லை மணி<br>ஆரூர் மணிவண்ணன் |
| இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | மாண்புமிகு<br>ராஜகண்ணப்பன்,<br>காதர்பாட்சாமுத்துராமலிங்கம்,<br>எம்.எல்.ஏ<br>கவிஞர்<br>ஆண்டாள் பிரியதர்சினி |
| தூத்துக்குடி வடக்கு | கோவில்பட்டி | மாண்புமிகு கீதாஜீவன்<br>மார்கண்டேயன், எம்.எல்.ஏ.,<br>கந்திலிகரிகாலன்<br>டாக்டர் கலைகதிரவன் |
| தூத்துக்குடி தெற்கு | திருவைகுண்டம் | மாண்புமிகு அனிதா<br>ஆர்.இராதாகிருஷ்ணன்<br>சண்முகையா எம்.எல்.ஏ.<br>கடலூர் இள.புகழேந்தி |
| திருநெல்வேலி கிழக்கு | அம்பாசமுத்திரம் | இரா. ஆவுடையப்பன்<br>ஆலங்குளம் மரியராஜ்<br>எஸ்.கே.ஸ்ரீராம்<br>சேலம் கோவிந்தன் |
| திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி | அப்துல் வகாப், எம்.எல்.ஏ.,<br>திருமதி விஜிலா சத்யானந்த்,<br>ஆம்பூர் தருமன் |
| தென்காசி வடக்கு | சங்கரன்கோவில் | இ. ராஜா, எம்.எல்.ஏ.,<br>மதுரை பாலா<br>திருப்பூர் கூத்தரசன் |
| தென்காசி தெற்கு | ஆலங்குளம் | ஜெயபாலன்<br>ஈரோடு இளையகோபால்<br>குடியாத்தம் பாரி |
| கன்னியாகுமரி கிழக்கு | நாகர்கோவில் | ஆர்.மகேஷ்<br>நெல்லை ஏ.ரவி<br>சிவகாசி ஜீவா |
| கன்னியாகுமரி மேற்கு | விளவங்கோடு | மனோ. தங்கராஜ்<br>ஆயிரப்பேரி மா.முத்துவேல்<br>உடன்குடி தனபால் |
| கிருஷ்ணகிரி மேற்கு | தளி | ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ.,<br>கம்பம் செல்வேந்திரன்<br>வழக்கறிஞர்<br>வி.வைத்தியலிங்கம்<br>ஆவடி கா.மு.ஜான் |
| திருப்பத்தூர் | திருப்பத்தூர் | கா.தேவராஜ், எம்.எல்.ஏ.,<br>நல்லதம்பி, எம்.எல்.ஏ.,<br>ஆலந்தூர் ஒப்பிலாமணி,<br>கவிஞர் ஏ.ராஜசேகர் |
| தருமபுரி கிழக்கு | தருமபுரி | பி.தர்மசெல்வன்<br>வி.பி.ராஜன்<br>சபி சுலைமான் |
| தருமபுரி மேற்கு | பாலக்கோடு | முனைவர் பழனியப்பன்<br>சேலம் இரா.தமிழரசன்<br>குடியாத்தம் புவியரசி<br>குமரி பிரபாகரன் |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18.
நாள்: 07-03-2025.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## சாகித்ய அகாடமி விருது பெற்ற

# பேராசிரியர் விமலாவுக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

**சென்னை, மார்ச். 10-**

**2024ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுக்கு தேர்வாகி இருக்கும் நெல்லை பேராசிரியயை திருமிகு ப.விமலாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

'எனது ஆண்கள்' நூலுக்காக 2024ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பு விருதுக்குத் தேர்வாகி இருக்கும் திருமிகு ப. விமலா அவர்களுக்கு எனது பாராட்டுகள்.



கல்விப்புலத்தில் இருந்து இலக்கிய மொழிபெயர்ப்புகளில் ஈடுபடும் தங்களின் பாராட்டத்தக்க பணி தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கலைஞர் அய்யா போட்ட தடத்தில் தமிழின இடர் நீக்க – முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றி வரும் தொண்டுகள் அளப்பரியன !

# தமிழ்நாடு முதல்வரின் பிறந்த நாள் - தமிழர்க்கெல்லாம் திருநாள்!

## ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக நிறுவனர் சா.செ.சந்திரஹாசன் அறிக்கை!



**சென்னை, மார்ச் 10 –**

**ஈழ ஏதிலியர் மறு வாழ்வுக் கழகத்தின்நிறுவனர் சா. செ. சந்திரஹாசன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், ''தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமின்றி எம். ஈழத் தமிழர் உள்பட உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒளி கொடுக்கும் தமிழ்நாடு முதல்வரின் பிறந்த நாள் தமிழர்க்கெல்லாம் திருநாளாகும்!'' என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமின்றி எம் ஈழத்தமிழர் உட்பட உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒளிகொடுக்கும் உங்கள் பிறந்த நாள் தமிழர்க்கெல்லாம் திருநாளாகும். நாளொரு சாதனை, பொழுதொரு திட்டம் எனக் கணந்தோறும் தமிழினத்தைக் கரையேற்றும் வரலாற்றைப் படைத்து வருகிறீர்கள். கடைத்தேற்றும்

தமிழ்நாட்டில் அடைக்கலம் தேடி வந்திருக்கும் எமது ஈழ ஏதிலியர் சமுதாயத்திற்கு, உள்ளூர் மக்களுக்கு என்னென்ன உரிமைகளும் சலுகைகளும், வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றனவோ, அவை அத்தனையும் செய்து கொடுத்துள்ள உங்கள் ஆட்சியின் மாட்சியைப் பாராட்ட வார்த்தைகள் கிடைக்காமல் திண்டாடுகின்றோம்.

அண்டை நாட்டில் பிறந்த எங்களுக்குத்தான் என்றில்லாமல் அகிலம் முழுவதும் வாழும் தமிழர் நலன்களைப் பேணவும், வளர்க்கவும் திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்திவரும் தங்களைப் பார்த்து தமிழன்னையே பிரமித்து நிற்கிறாள். கலைஞர் அய்யா போட்ட தடத்தில் தமிழின இடர்நீக்க நீங்கள் ஆற்றிவரும் தொண்டுகள் அளப்பரியன. அத்தகைய தொண்டுள்ளமும், தொலைநோக்கும் கொண்ட தாங்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

என் சார்பிலும் எம்.ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் சார்பிலும் தந்தை செல்வா வழியில் கரையேறத் துடிக்கும் தமிழீழ மக்கள் சார்பிலும் எமது உளமார்ந்த பிறந்த நாள் வாழத்துக்கள்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## சிம்பொனியை அரங்கேற்றிய முதல் இந்தியர்

# இசைஞானி இளையராஜாவின் சிம்பொனி லண்டனில் அரங்கேற்றம்!

லண்டன், மார்ச்.10-

இசைஞானி என அனைவராலும் அழைக்கப்படும் இளையராஜா, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி உள்ளிட்ட மொழிகளில் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட திரைப் படங்களுக்கு இசையமைத்துள்ளார். 500க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியதோடு பாடியும் இருக்கிறார். இசைக்கு அவர் அளித்த பங்களிப்பை போற்றும் வகையில் பல்வேறு விருதுகளையும் இசைஞானி பெற்றுள்ளார். மேற்கத்திய இசையுடன் நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானிய இசையை ஒருங்கிணைத்து 1986, 1988 ஆகிய ஆண்டுகளில் *how to name it* மற்றும் *nothing but wind* எனப் பெயரிடப்பட்ட நீண்ட நேர இசைத் தொகுப்புகளை அவர் வெளியிட்டிருந்தார். 2005 ஆம் ஆண்டில் திருவாசகத்தை மேற்கத்திய இசைக் கருவிகளின் இசையோடு வெளியிட்டதை அடுத்து அவர் தொடர்ந்து சிம்பொனியில் ஆர்வம் காட்டி வந்தார். இந்நிலையில், *valiant* என பெயரிட்டுள்ள தனது முதல் சிம்பொனியை இளையராஜா லண்டனில் அரங்கேற்றம் செய்தார். இந்த சிம்பொனியை உலகின் சிறந்த இசைக் குழுவான ராயல் பிலார்மோனிக் குழுவினர் இசைத்தனர். புகழ்பெற்ற ஈவன்டின் அப்பல்லோ அரங்கத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தியாவிலிருந்து முதல் முறையாக சிம்பொனி யை அரங்கேற்றியதன்மூலம், மொஸார்ட், பீத்தோவன் போன்ற இசை மேதைகளின் வரிசையில் இளையராஜா இணைந்துள்ளார்.



கடந்த வாரம் இளையராஜாவின் வீட்டிற்கே சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவரது சிம்பொனி இசை அரங்கேற்றத்திற்கு வாழ்த்துகளை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிதம்பரம் நகரக் கழக அவைத் தலைவர்

# பி.எஸ்.ராஜராஜன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச். 10-

சிதம்பரம் நகர க் கழக அவைத் தலைவர், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர், எண்ணெய் கடை ராஜா (எ) பி.எஸ்.ராஜராஜன் அவர்கள், 07.03.2025 அன்று இரவு 10:00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைவுச் செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துள்ளார்.

# காஞ்சிபுரத்தில் முதல்வர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்

காஞ்சிபுரம், மார்ச், 10-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மாநில வர்த்தகஅணிசார்பில்மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவைமுன்னிட்டுமாபெரும்பொதுக்கூட்டம்மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா10.3.2025திங்கள் கிழமை அன்று மாலை 5 மணிக்கு, நடுத்தெரு தாலுக்காஅலுவலகம்எதிரில் காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.கழக வர்த்தகர் அணி மாநில துணைச் செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன் அனைவரையும்வரவேற்றுப் பேசுகிறார்.

கே.திலகர், ஒ.எஸ்தினகரன், த.ரவிச்சந்திரன், மண்டி க.சம்பத், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கி கழகவர்த்தகர்அணிமாநிலச் செயலாளர்கவிஞர்காசிமுத்துமாணிக்கம்சிறப்புரையாற்றுகிறார்.

சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.எழிலரசன் எம்.எல்.ஏ., சி.கே. வி.தமிழ்ச்செல்வன், மேயர் மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், எம்.எஸ்.சுகுமார், எஸ்.கே.பி.சீனிவாசன், எஸ்.சிகாமணி,ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், பெ.சுந்தரவரதன், கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச்செல்வம், வ.ஜெகன்நாதன்,பி.நிர்மலா, கே.சுப்பராயன், எஸ்.சந்துரு, அ.தசரதன்,சு.வெங்கடேசன், க.சசிகலா, சாந்தி சீனிவாசன், எஸ்.மோகன், எஸ்.சுகமார், எஸ்.சேகர், த.விஸ்வநாதன், எஸ்.மாமன்னன்,ஜெ.வரதராஜன், பி.சங்கர், மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

# தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் இந்தியன் கப்பல் மாலுமிகள் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 328/CDR, பேரவை இணைப்பு எண். 1133) பொதுச்செயலாளராக உள்ள திரு. சற்குணம் அவர்கள் மீது பல்வேறு புகார்கள் தொ.மு.ச. பேரவைக்கு வந்துள்ளது. எனவே அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசித்து தற்காலிகமாக அவர் நீக்கி வைக்கப்பட்டுள்ளார். எனவே, மேற்கண்ட சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. சற்குணம் அவர்களுக்கும் தொ.மு.ச. பேரவைக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை. எனவே இனி சங்கம் சம்மந்தமாக அவரிடம் யாரும் தொடர்புகொள்ளவேண்டாம்எனகேட்டுக்கொள்கிறோம்.

**கலைஞரகம்**
சென்னை - 17
நாள்- 08.3.2025

**மு.சண்முகம் எம்.பி.**
பொதுச் செயலாளர்,
தொ.மு.ச. பேரவை





கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் நேற்று முன்தினம் மார்ச் 08, உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, மகளிர் உள்ளாட்சிப் பிரதிநிதிகளுடன், கேக் வெட்டி, அவர்களுக்கு புத்தாடைகள் மற்றும் அறுசுவை அசைவ உணவு வழங்கி, தனது மகளிர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ந்தார்,இந்த நிகழ்வில் உள்ளாட்சி மன்ற மகளிர் பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

# மாமல்லபுரம் நகரக் கழகப் பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாமல்லபுரம் நகர கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, மாமல்லபுரம் நகரக் கழக பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

பொறுப்பாளர் : **வெ. விசுவநாதன்,** 6, மாதா கோவில் தெரு, மாமல்லபுரம் 603 104. காஞ்சிபுரம் மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :

1. ந. நந்தகோபால், 25, திருக்குளத் தெரு, மாமல்லபுரம்
2. உ. முருகன், 1, திருக்குளத் தெரு, மாமல்லபுரம்.
3. எம்.இ. முனுசாமி, கோவளம் சாலை, மாமல்லபுரம்.
4. மொ. மீராசாகிப், 41, ஜி.கே.மண்டபம் தெரு, மாமல்லபுரம்.
5. பு. சண்முகாநந்தன், 24, ஒத்தவாடை தெரு, மாமல்லபுரம்
6. த.வெங்கடேசன், 131, அண்ணா நகர் தெரு, மாமல்லபுரம்
7. எஸ். பத்திநாதன், 3, காந்தி தெரு, மாமல்லபுரம்.
8. தே. சுதா, 35, மீனவர் பகுதி வெண்புருஷம், மாமல்லபுரம்.
9. பி. தேவேந்திரன், 18பி, பாரதி தெரு, பூஞ்சேரி.
10. எஸ். தமிழரசி, 44ஏ, பவளகார சத்திரம், கூத்தவாக்கம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 08.03.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் ரெட்டனை அண்ணா திடலில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72வதுபிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் பேச்சாளர் தமிழ்தாசன் சிறப்புரையாற்றினார். உடன் விழுப்புரம் வடக்கு செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செஞ்சி சிவா, டாக்டர் சேகர், யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர் மணிமாறன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.